**கவனிக்க.-** *2016.09.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1984 - 2016 සැප්තැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2016.09.09**

*1984 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 156 |


**கவனிக்க.–** *மருத்துவம் (திருத்தம்) சட்டமூலம் 2016, யூன் மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2016, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பி.கே.எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## லாபீர் மன்றத்தினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ஏ. ஏ. அமுத்கமகே ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 48(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "லாபீர் மன்றத்தினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக்குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தினைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

1. சிறார்களின் கல்வியை மேம்படுத்துதல்;
2. இனங்களுக்கிடையில் சமாதானத்தை வளர்த்தல்;
3. நாட்டின் அபிவிருத்தியில் பங்கேற்றல் மற்றும்

பிறவும்.

ஏ. ஏ. அமுத்கமகே ,
பாராளுமன்ற உறுப்பினர்,
கண்டி மாவட்டம்.

9- 206

---

## நூட்டில் சுற்றாடல் மன்றத்தை ( இணைத்தல்) கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

டாக்டர் ஜயம்பதி விக்கிரமரத்ன ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 48(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் " நூட்டில் சுற்றாடல் மன்றத்தை ( இணைத்தல்) கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக்குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தினைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

1. மீளாய்வின் போது பெற்றுக்கொண்ட பெறுபேறுகளை காலத்துக்குக் காலம் பிரசுரித்தல், ஆலோசனை வழங்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்கு உதவுதல்;
2. உள்நாட்டு உணவு வகைகளை ஊக்குவித்தல், பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம், மாற்றுச்சக்திப் பயன்பாட்டை பிரபல்யப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல் மேலும் குறைந்த செலவிலான சுற்றாடல் பாதுகாப்பு தொழில்நுட்பத்தை மாற்றியமைத்தல் மற்றும் இலகுபடுத்தல்;
3. இலங்கையின் இயற்கையான உயிரியல் அல்லாத வளங்களை பாதுகாத்தல், உள்நாட்டு அறிவை மற்றும் கலாச்சார, பரம்பரை சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும்

பிறவும்.

டாக்டர் ஜயம்பதி விக்கிரமரத்ன,
பாராளுமன்ற உறுப்பினர்.

9- 249

## மேல் மாகாண மேல் நீதிமன்றம் ( கொழும்பில் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்)

கொழும்பு 10, மருதானை, 1 ஆம் பிரிவு 193 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த கலீல்ஸ் மருதானை நேர்சிங் ஹோம் ( பிறைவேட் ) லிமிட்டட் விடயத்தில்

மே.நீ.(குடியியல்)
வழக்கில்
37/2016/CO

அத்துடன்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் பாகம் XII இன் கீழான விண்ணப்பத்தின் விடயத்தில் ,

ஐ.அ.நாடுகள் , கலிபோர்னியா 95825, சக்ரமென்ட்டோ, கின்கேய்ட் வே, 2136 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த டாக்டர் எம். நவாஸ் கலீல்,

( அவரது அற்றோணித்தத்துவகாரரான கொழும்பு 6, ராஜசிங்க வீதி, 01 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஹுசெய்ன் இம்டியாஸ் முஹ்சின் என்பவரின் மூலம் தோன்றுபவர்)

மனுதாரர்

எதிர்

கலீல்ஸ் மருதானை நேர்சிங் ஹோம் (பிறைவேட்) லிமிட்டட் , இல. 193, 1 ஆம் பிரிவு, மருதானை, கொழும்பு 10.

பிரதிவாதி

கொழும்பு மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தினால் ( அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று, 2016, ஓகத்து மாதம் 2 ஆம் நாளன்று ஐ.நாடுகள், கலிபோர்னியா 95825 , சக்ரமென்ட்டோ, கின்கேய்ட் வே, 2136 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த டாக்டர் எம். நவாஸ் கலீல் என்பவரினால் சொல்லப்பட்ட நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்பட்டதென்றும், சொல்லப்பட்ட மனுவானது, 2016, நவெம்பர் 01 ஆம் திகதியன்று சொல்லப்பட்ட நீதிமன்றத்தின் முன்னர் கேட்கப்படுவதற்கு பணிக்கப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றதுடன், சொல்லப்பட்ட மனுமீது கட்டளையொன்று ஆக்கப்படுவதனை ஆதாரப்படுத்துவதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்புகின்ற சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன்கொடுநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது பதிவு செய்யப்பட்ட அற்றோணி மூலமாகவோ கேட்பு நேரத்தில் தோன்றலாம். அத்துடன் மனுவின் பிரதியொன்று, அதனைத் தேவைப்படுத்தும் சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன்கொடுநருக்கு அல்லது உதவுதொகை செலுத்துனருக்கு அதற்காக விதித்துரைக்கப்பட்ட கட்டணம் கொடுப்பனவின் மீது கீழே கையொப்பமிட்டவரினால் கொடுத்துதவப்படும்.

நித்தி முருகேசு அன்ட் அசோசியேட்ஸ்,
மனுதாரருக்கான பதிவுசெய்யப்பட்ட அற்றோணிகள்,
இல.28, (மட்டம் 2) டபிள்யூ ஏ டி ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

**குறிப்பு**.- சொல்லப்பட்ட மனுவின் கேட்பின்போது தோன்றுவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள், அவ்வாறு செய்வதற்கான அவரது உட்கருத்துப்பற்றிய எழுத்திலான அறிவித்தலை மேலே பெயர்குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தரணிகளான திருவாளர் நித்தி முருகேசு அன்ட் அசோசியேட்ஸ் என்போருக்குச் சேர்ப்பித்தல் வேண்டும் அல்லது அஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். அறிவித்தலானது, ஆளின் பெயரையும் முகவரியையும் அல்லது குழுமமொன்றாயின் குழுமத்தின் பெயரையும் முகவரியையும் கூறுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாளினால் அல்லது அக்குழுமத்தினால் அல்லது அவரது அல்லது அவர்களது பதிவுசெய்யப்பட்ட அற்றோணிகளினால் ( எவரேனுமிருப்பின்) கையொப்பமிடப்படுதலும் வேண்டும். மேலே பெயர் குறிப்பிடப்பட்டவருக்கு 2016, ஒற்றோபர் 31 ஆம் நாளன்று பிற்பகல் 6.00 மணிக்கு பிந்தாமல் அது சேர்ப்பிக்கப்படல் வேண்டும். அல்லது அஞ்சலிலிடப்படின் அந்நேரத்திற்கு முன்னர் அவரைச் சென்றடையக் கூடிய வகையில் போதிய நேரகாலத்துடன் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

நித்தி முருகேசு மற்றும் அசோசியேட்ஸ்,
மனுதாரருக்காக பதிவுசெய்யப்பட்ட அற்றோணிகள்.

9-377